SHANMUGAM IAS ACADEMY®

ISO 9001:2015

YOU DREAM…! OUR RESPONSE…!













# நடப்பு நிகழ்வுகள்

# ஏப்ரல் 7, 2022

# சர்வதேசம்

## ரஷ்யா மீது பொருளாதாரதடை – மேலை நாடுகள் முடிவு

### சுருக்கம்:



- உக்ரைனின் புச்சா நகரில் பொதுமக்கள் துன்புறுத்தி படுகொலை செய்யப்பட்டது தொடர்பாக, ரஷியா மீது கூடுதல் பொருளாதாரத் தடைகளை விதிக்க ஐரோப்பிய யூனியனும் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளும் முடிவு செய்துள்ளன.
- ரஷியப் படையினர் சுமார் ஒரு மாதமாக ஆக்கிரமித்திருந்த உக்ரைன் தலைநகர் கீவின் புகாரப் பகுதியான புச்சாவில், அவர்கள் நூற்றுக்கணக்கான பொதுமக்களை படுகொலை செய்ததாக உக்ரைன் அதிகாரிகள் கூறியது மேற்குலக நாடுகளில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- படுகொலைகளுக்கான எதிர்ப்பை பதிவு செய்யும் வகையில், தங்கள் நாடுகளிலிருந்து ரஷியத் தூதரக அதிகாரிகள் சிலரை வெளியேறுமாறு பல்வேறு ஐரோப்பிய நாடுகள் உத்தவிட்டுள்ளன.
- ஐரோப்பிய ஆணையத்தின் 27 உறுப்பு நாடுகளின் பிரதிநிதிகள் பெல்ஜியம் தலைநகர் பிரஸ்ஸெல்ஸிலுள்ள தலைமையகத்தில் கூடி, ரஷியா மீது 5–ஆவது கட்ட பொருளாதாரத் தடைகளுக்கான பரிந்துரைகளுக்கு ஒருமனதாக ஒப்புதல் அளித்தனர்
- ரஷியாவில் புதிதாக முதலீடு செய்வதற்கு முழுமையான தடை விதிப்பது, ரஷியாவிலிருந்து நிலக்கரி இறக்குமதி செய்வதற்கு தடை விதிப்பது போன்ற பல்வேறு அம்சங்கள் இடம் பெற்றுள்ளன.
- புச்சா படுகொலை விவகாரத்தில் ரஷியாவை தண்டிக்கும் வகையில் அந்த நாட்டின் மீது ஐரோப்பிய யூனியனுடன் இணைந்து அமெரிக்காவும் பொருளாதாரத் தடைகளை விதிக்க முடிவு செய்துள்ளது.
- புதிய பொருளாதாரத் தடைகளில் ரஷிய நிதி அமைப்புகள், பொதுத் துறை நிறுவனங்கள் மீது இன்னும் கடுமையான தடை விதிப்பது, ரஷிய அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் சொத்துகளை முடக்கி அவா்களுக்கு பயணத் தடை விதிப்பது உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இடம் பெற்றுள்ளதாக வெள்ளை மாளிகை செய்தித் தொடர்பாளர் ஜென் சாகி தெரிவித்தார்.
- கூடுதல் பொருளாதாரத் தடைகளின் ஒரு பகுதியாக, ரஷியாவிலிருந்து ஆண்டுக்கு 400 யூரோ (சுமார் ரூ.33,125 கோடி) மதிப்பிலான பொருள்களின் இறக்குமதிக்குத் தடை விதிப்பதற்கான நடவடிக்கைகளை ஆய்வு செய்து வருவதாக ஐரோப்பிய யூனியன் தலைவா் உா்சுலா வோண்டொ் லியென் தெரிவித்துள்ளார்.

# தேசிய செய்திகள்

## 13 சர்வதேச வர்த்தக ஒப்பந்தங்கள் – மத்திய அரசு

### சுருக்கம்:




- சர்வதேச நாடுகளுடன், கடந்த 5 ஆண்டுகளில் இந்தியா 13 சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது. அதன்படி, இந்தியா தனது வர்த்தக பங்காளிகளுடன் 13 சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்தியுள்ளது.
- சமீபத்தில் கையெழுத்தான இந்தியா–ஆஸ்திரேலியா பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம் (IndAus ECTA), இந்தியா–மொரிஷியஸ் விரிவான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் கூட்டு ஒப்பந்தம் (CECPA) மற்றும் இந்தியா–ஐக்கிய அரபு அமீரகம் விரிவான கூட்டு ஒப்பந்தம் (CEPA) ஆகியவையும் அடங்கும்.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- இந்தியா 6 வரையறுக்கப்பட்ட முன்னுரிமை வர்த்தக ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளது.
- இந்த தகவலை வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் இணை மந்திரி அனுப்ரியா படேல் மக்களவையில் எழுத்துப்பூர்வமாக தெரிவித்தார்.
  1. இந்தியா–இலங்கை சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் (FTA)
  2. தெற்காசிய சுதந்திர வர்த்தகப் பகுதிக்கான ஒப்பந்தம் (SAFTA) (இந்தியா, பாகிஸ்தான், நேபாளம், இலங்கை, பங்களாதேஷ், பூட்டான், மாலத்தீவுகள் மற்றும் ஆப்கானிஸ்தான்)
  3. இந்தியா–நேபாள வர்த்தக ஒப்பந்தம்
  4. வர்த்தகம், வியாபாரம் மற்றும் போக்குவரத்து தொடர்பான இந்தியா–பூடான் ஒப்பந்தம்
  5. இந்தியா–தாய்லாந்து சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் – ஆரம்ப அறுவடை திட்டம்
  6. இந்தியா–சிங்கப்பூர் விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம்
  7. இந்தியா–ஆசியான் விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம் – பொருட்கள், சேவைகள் மற்றும் முதலீட்டு ஒப்பந்தம் (புருனே, கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மியான்மர், பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து மற்றும் வியட்நாம்)
  8. இந்தியா–தென் கொரியா விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம்
  9. இந்தியா–ஜப்பான் விரிவான பொருளாதார கூட்டு ஒப்பந்தம்
  10. இந்தியா–மலேசியா விரிவான பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தம்
  11. இந்தியா–மொரிஷியஸ் விரிவான பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் கூட்டு ஒப்பந்தம்
  12. இந்தியா–ஐக்கிய அரபு அமீரகம் விரிவான கூட்டு ஒப்பந்தம்
  13. இந்தியா–ஆஸ்திரேலியா பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் வர்த்தக ஒப்பந்தம்
- மேற்கண்ட ஒப்பந்தங்களின் பொருளாதார தாக்க மதிப்பீட்டில், ஒப்பந்தம் செய்யப்பட்ட நாடுகளுடனான ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகிய இரண்டிலும் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது தெரியவந்துள்ளது.

# 2023-ம் ஆண்டு இறுதியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு

**சுருக்கம்:**

- 2023-ம் ஆண்டு இறுதியில் தமிழகத்தில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படும் என முதலமைச்சர் ஸ்டாலின் சட்டப்பேரவையில் அறிவித்துள்ளார்.



- "தமிழக அரசு தொழில் துறையில் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் முதலீட்டாளர்களுக்கு, புதிய தொழில் தொடங்குவோருக்கு மிகப்பெரிய நம்பிக்கையை இந்த அரசின்மீது, தமிழ்நாட்டின் மீது அளித்திருக்கிறது.
- கடந்த 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் டிசம்பர் வரையில் மட்டும் தமிழ்நாட்டில் வெளிநாட்டு நேரடி முதலீடு (Foreign Direct Investment) என்பது 41.5 விழுக்காடு அதிகரித்துள்ளது."

**முக்கிய சிறப்பம்சங்கள்:**

- சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்க நாட்டிலும், முன்னணி முதலீட்டாளர்களை சந்தித்து, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கான முயற்சிகள் ஏற்கனவே தொடங்கி விட்டன என்றும், தமிழகத்தில் அடுத்த ஆண்டு இறுதியில் உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்படும் என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.
- 2022 ஆண்டு மே மாதத்தில் சுவிட்சர்லாந்து நாட்டில் நடைபெறவுள்ள உலகப் பொருளாதார அமைப்பின் வருடாந்திர கூட்டத்திலும், ஜெர்மனி நாட்டில் ஹானோவர் நிகழ்விலும், ஜூன் மாதத்தில் இங்கிலாந்தில் நடைபெறவுள்ள "க்ளோபல் ஆஃப் ஷோர் விண்ட்" (Global Off Shore Wind) நிகழ்விலும், ஜூலை மாதத்தில் அமெரிக்க நாட்டிலும், முன்னணி முதலீட்டாளர்களைச் சந்தித்து, தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான முதலீடுகளை ஈர்ப்பதற்கான முயற்சிகள் ஏற்கெனவே தொடங்கி விட்டன .
- 19ம் தேதி வேளாண் பட்ஜெட்டை, வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார். சட்டப்பேரவை தலைமை செயலகத்தில் உள்ள பேரவை மண்டபத்தில் கடந்த மாதம் 18ம் தேதி கூடியது.
- தமிழக அரசின் 2022-23ம் ஆண்டுக்கான பொது பட்ஜெட்டை நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தாக்கல் செய்தார்.

# குற்றவியல் அடையாள விதிமுறை மசோதா

**சுருக்கம்:**



- குற்றவியல் அடையாள விதிமுறை மசோதாவுக்கு மாநிலங்களவை ஒப்புதல் வழங்கியதையடுத்து, அந்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.
- குற்றவாளிகள், குற்றச் செயலில் ஈடுபட்டதாகக் கைது செய்யப்படும் நபர் ஆகியோரின் உடல் மற்றும் உயிரியல் அடையாளங்களை காவல் துறையினர் சேகரிப்பதற்கு சட்டபூர்வ ஒப்புதல் அளிக்கும் குற்றவியல் அடையாள விதிமுறை மசோதா முன்னதாக மக்களவையில் நிறைவேற்றப்பட்டது.

**முக்கிய சிறப்பம்சங்கள்:**

- மசோதாவை மாநிலங்களவையில் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தாக்கல் செய்தார் "நாட்டின் 100 ஆண்டுகள் பழைமைவாய்ந்த சட்டத்தில் தொழில்நுட்ப வளர்ச்சிகளை உட்புகுத்தி

விசாரணை நடைமுறையை வலுப்படுத்துவதும், குற்றவாளிகள் தண்டிக்கப்படும் விகிதத்தை அதிகரிப்பதும்தான் குற்றவியல் அடையாள விதிமுறை மசோதாவின் நோக்கம்.

- தற்போது நடைமுறையில் உள்ள கைதிகள் அடையாளச் சட்டம், 1920 ஆங்கிலேயர்கள் காலத்தில் உருவாக்கப்பட்டது.
- இது நவீன காலத்துக்குப் போதுமானதாக இல்லை. தனிமனித உரிமையும், மனித உரிமைகளையும் மீறும் வகையில் எந்தவொரு குறைபாடுகளும் மசோதாவில் இடம்பெறாததை அரசு உறுதி செய்யும்.
- உடல் மற்றும் உயிரியல் அடையாளங்கள் தொடர்பான தரவுகள் முழுமையாகப் பாதுகாக்கப்படும்.
- குற்றவியல் அடையாள விதிமுறை மசோதா அரசமைப்புக்கு முரணானது; சட்டவிரோதமானது. இந்த மசோதாவை நிறைவேற்றினால், நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வோம்.
- ஒரு குற்றத்துக்கான தண்டனை ரூ.100 அபராதமாக இருந்தால், அதற்கும் இந்தச் சட்டம் பொருந்தும்.
- இதுபோன்ற சட்டத்தால் ஏழ்மையானவர்களும், விளிம்பு நிலையில் உள்ளவர்களும்தான் அதிகம் பாதிக்கப்படுபவர்களாக இருப்பர்
- இந்தச் சட்டத்தை காவல் துறை தவறாகப் பயன்படுத்த முடியும். நார்க்கோ அனாலிசஸ், பாலிகிராஃப், பிஇஏபி ஆகிய உண்மை கண்டறியும் பரிசோதனைகள் சட்டவிரோதமானவை, அரசமைப்புக்கு முரணானவை என்பதே கடந்த 2010-ஆம் ஆண்டு முதல் இந்த நாட்டின் சட்டமாக உள்ளது.
- இந்த உண்மை கண்டறியும் பரிசோதனைகளும் குற்றவியல் அடையாள விதிமுறை மசோதாவில் இடம்பெற்றுள்ளதா என்பதை அரசு தெளிவுபடுத்த வேண்டும் என்றார் அவர் இதனைத்தொடர்ந்து, இந்த மசோதா குரல் வாக்கெடுப்பு மூலம் நிறைவேற்றப்பட்டது.

## அரிக்கமேட்டில் மத்திய தொல்லியல் துறை மீண்டும் அகழாய்வு செய்ய முடிவு

### சுருக்கம்:



- 'கடல் வாணிபத்தில் தமிழர்கள் கொடிக்கட்டி பறந்தார்கள்' என்பதற்கு நினைவுச் சின்னமாக உள்ள அரிக்கமேடு பராமரிப்பின்றி உள்ள சூழலில், மத்திய தொல்லியல் துறை மீண்டும் அங்கே அகழ்வாய்வு செய்ய முடிவு எடுத்துள்ளது.
- புதுச்சேரி அரியாங்குப்பம் அருகே இருக்கும் அரிக்கமேடு பகுதி வங்காள விரிகுடா கடலில் இருந்து 3 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கி.மு.200 முதல் கி.பி.200 வரை இங்கு கடல் வாணிபம் நடந்ததற்கான ஆதாரங்கள் அகழாய்வு மூலம் கிடைத்துள்ளன.


### முக்கிய சிறப்பம்சங்கள்:

- ரோமானிய மன்னன் அகஸ்டஸ் உருவம் பொறித்த நாணயங்கள், மணிகள், சுடுமண் பொம்மைகள் கண்டெடுக்கப்பட்டதன் மூலம், இப்பகுதியில் இருந்து ரோமானியர்களுடன் வாணிபம் நடந்தது உறுதிப்படுத்தப்பட்டது.
- பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லெழாந்தீய், அரிக்கமேட்டின் சிறப்பை 1769-ல் நூலாக வெளியிட்டார். 1908-ல் பிரெஞ்சுக் கல்லூரியின் பேராசிரியர் ழவோ துய்ப்ராய், அரிக்கமேடுப் பகுதியில் சிறுவர்கள் வைத்து விளையாடிய பல வண்ண மணிகள், மண்பாண்ட ஓடுகளைச் சேகரித்தார்.
- அகஸ்டஸின் தலை பொறிக்கப்பட்ட கோமேதகப் பதக்கமும், ஒருபுறம் யானை உருவமும் மறுபுறம் சிங்கம் பொறிக்கப்பட்ட ரோமானிய நாணயங்களும் கிடைத்தன.

- அரிக்கமேடுப் பகுதியில் கிடைத்த சாயத்தொட்டி உறைகிணறு, பிராமி எழுத்து அமைந்த பானை ஓடு, யவனக் குடியிருப்பின் சுவர் பகுதிகளை ஆராய்ந்து நூல்களும் வெளிநாட்டவரால் வெளியிடப்பட்டன.
- தமிழர்கள் கடல் வாணிபத்தில் கொடிகட்டி பறந்தார்கள் என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த இடம் தற்போது திறந்தவெளி மதுக்கூடமாகவே மாறியுள்ளது.
- மறுபுறமோ மணல் திருட்டு அதிகளவில் நடக்கிறது. வரலாற்று சின்னங்களையும் சிதைத்து மணல் திருட்டுநடக்கிறது.
- இந்திய தொல்லியல்துறை கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் கூட சர்வ சாதாரணமாக மணலை திருடி செல்கின்றனர்.

## பிரெய்லி வடிவில் 41 தமிழ்ச் செவ்வியல் நூல்கள்

### சுருக்கம்:




- பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில், 41 தமிழ்ச் செவ்வியல் நூல்களையும் சந்தி பிரித்து எளிய உரையுடன் பிரெய்லி நூல்களாக வெளியிடும் பணிகள் நடைபெற்று வருவதாக செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் இயக்குநர் இரா.சந்திரசேகரன் கூறியுள்ளார்.
- செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தில், பல்வேறு வகையிலான தமிழ் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளப் புதிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மாதத்துக்கு குறைந்தது ஐந்து நூல்களை வெளியிட வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டு அதற்கான பணிகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- இணையவழியில் செம்மொழித் தமிழ்க் கல்வியைக் கற்றல், செவ்வியல் சுவடிகளைக் கணினியில் தேடுதல், பன்னாட்டு ஆய்விதழ் வெளியிடுதல், உலகளாவிய மொழிகளைத் தமிழ் மொழியுடன் ஒப்பிட்டு ஒப்பியல் ஆய்வுகளை மேற்கொள்ளுதல், பன்னாட்டு அளவிலான கருத்தரங்கங்களை நடத்துதல் முதலான பணிகளை தீவிரமாக மேற்கொண்டு வருகிறோம்.
- அதேபோன்று புகழும், புலமையும் வாய்ந்த பேராசிரிய களைக் கொண்டு செவ்விலக்கிய சிறப்புகளைக் காட்சிப்படுத்தி யூடியூப் மூலம் பரவச்செய்யும் வகையில் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.
- நாள்தோறும் ஒரு அறிஞரை அழைத்துக் காட்சிப்படுத்தும் வகையில் புதிய வளாகத்தில் உரிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- புகழ்பெற்ற வெளிநாட்டுப் பல்கலைக்கழங்களில் செவ்வியல் தமிழ் இருக்கைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.
- முதல்கட்டமாக இந்தோனேசியா, தாய்லாந்து, கம்போடியா, வியட்நாம், ரியூனியன் ஆகிய நாட்டுப் பல்கலைக்கழகங்களில் செவ்வியல் தமிழ் இருக்கைகள் அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் பயன்பெறும் வகையில், 41 தமிழ்ச் செவ்வியல் நூல்களையும் சந்தி பிரித்து எளிய உரையுடன் பிரெய்லி நூல்களாக வெளியிடும் பணிகள் நடைபெற்று வருகின்றன.
- பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு இந்நூல்கள் இலவசமாக வழங்கப்படும் என்றார்.

## போர்ப்ஸ் பட்டியலில் இந்திய கோடீஸ்வரர்கள் – 2022

### சுருக்கம்:



- முகேஷ் அம்பானி, கௌதம் அதானி ஆகியோர் இந்தியாவின் பணக்காரர்கள் பட்டியலில் 1 மற்றும் 2ஆவது இடங்களைப் பிடித்துள்ளனர் .
- உலகெங்கிலும் உள்ள பில்லியனர்களின் 36 வது வருடாந்திர தரவரிசை பட்டியலில் பல இந்தியர்கள் இடம்பிடித்தனர். அந்த வகையில், ஃபோர்ப்ஸ் வெளியிட்ட தகவல்படி, சமீபத்திய பணக்காரர்கள் பட்டியலில் அம்பானிகள், அதானிகள், மிட்டல்கள் உட்பட பலர் இணைந்துள்ளனர்.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி, ரிலைன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் தலைவர் முகேஷ் அம்பானியை பின்னுக்கு தள்ளி ஆசியாவிலேயே பெரிய பணக்காரர்கள் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளார்.
- உலகளவில் கோடீஸ்வரர் பட்டியலில் அமேசான் சிஇஓ ஜெப் பெசாஸ் முதலிடத்தில் உள்ளார்.
- முகேஷ் அம்பானி ; ரிலையன்ஸ் நிறுவனத்தின் தலைவரான முகேஷ் அம்பானி, 90.7 பில்லியன் டாலர் சொத்து மதிப்புடன் ஆசியாவின் மிகப் பெரிய பணக்காரராகவும், உலகின் பத்தாவது பணக்காரராகவும் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டார்.
- கௌதம் அதானி மற்றும் குடும்பம் : ஆசியாவின் இரண்டாவது பெரிய பணக்காரரான அதானி குடும்பத்தின் நிகர சொத்து மதிப்பு $90 பில்லியன் ஆகும். அவர் உலக தரவரிசையில் 11வது இடத்தில் உள்ளார்.
- ஷிவ் நாடார் : HCL டெக்னாலஜிஸ் லிமிடெட் நிறுவனர் நாடார், இந்தியாவின் மூன்றாவது பெரிய பணக்காரர் ஆவர். அவரது சொத்து மதிப்பு 22 சதவீதம் அதிகரித்துள்ளது.
- ஃபோர்ப்ஸ் படி, அவரது நிகர மதிப்பு $28.7 பில்லியன் ஆகும். உலக தரவரிசையில் 47வது இடத்தில் உள்ளார்.

## ஆராய்ச்சி பணிகளுக்கான தேர்வு நகரங்களில் சென்னைக்கு 2வது இடம்

### சுருக்கம்:



- எலக்ட்ரானிக்ஸ் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனங்கள், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளுக்காக தேர்வு செய்யும் இடங்களில், அன்னிய நேரடி முதலீட்டின் மதிப்பில், சென்னை இரண்டாவது இடம் பிடித்துள்ளது.
- லண்டன் நாட்டை தலைமையிடமாகக் கொண்டு, மாதம் இருமுறை வெளிவருகிறது, 'எப்.டி.ஐ., இன்டலிஜென்ஸ்' இதழ்.இந்த இதழில் உலக அளவில், எலக்ட்ரானிக்ஸ் உதிரி பாகங்கள் தயாரிக்கும் நிறுவனங்களின் தர வரிசையை, அன்னிய நேரடி முதலீட்டின் அடிப்படையில், முதல் 100 நகரங்கள் குறித்த பட்டியலை வெளியிட்டது.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- குறைந்த செலவில் தரமான ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு பணிகளுக்கான தேர்வாகவும் இது அமைந்தது.
- ஆய்வில், உலக அளவில் அதிகம் தேர்வு செய்யும் நகர்களின் பட்டியலில், தென்கொரியா தலைநகர் சியோல் முதல் இடம் பிடித்துள்ளது.இரண்டாவது இடத்தை, இந்தியாவில் சென்னை பிடித்துள்ளது.
- நம் நாட்டின் கர்நாடகா மாநிலத்தின் தலைநகர் பெங்களூரு, மகாராஷ்டிரா மாநிலத்தின் புனே மற்றும் ஹரியானா மாநிலத்தின் குர்கான் ஆகிய நகரங்களும், அடுத்த 10 இடங் களுக்குள் உள்ளன.
- எலக்ட்ரானிக்ஸ் நிறுவனங்களின் அன்னிய முதலீட்டின் அடிப்படையில், சென்னை நகரம் மட்டுமே, ஆண்டுக்கு மிகக் குறைந்த செயல்பாட்டு செலவை ஏற்படுத்துகிறது.
- சென்னையில் உள்ள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையத்தில் பணிபுரியும், நபர்களில் 50 பேருக்கு ஆண்டுக்கு 9.54 கோடி ரூபாய் மட்டுமே செயல்பாட்டு செலவாகிறது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
- இதையடுத்து, மலேஷியா நாட்டின் பினாங் நகரில் ஆண்டுக்கு, 10 கோடி ரூபாய்; குர்கான் மற்றும் புனேவில், 11.60 கோடி ரூபாய் ஆண்டுக்கு செயல்பாட்டு செலவாக உள்ளது.
- இதர நாடுகளை ஒப்பிடும் போது, இந்தியாவில் எலட்க்ரானிக்ஸ் தொடர்பான பொருட்கள் தயாரிப்புக்கு, குறைவான செலவு ஏற்படுகிறது.
- செமி கண்டக்டர் மற்றும் எலக்ட்ரானிக்ஸ் உதிரி பாகங்கள் தயாரிப்பு துறையில், ஆராய்ச்சி மற்றும் புதுமையை கண்டுபிடிப்பதே, நாட்டிற்கு முக்கியம் என, பிரதமர் மோடி ஊக்கப்படுத்தி உள்ளார் என, அந்த மாத இதழ் வெளியிட்ட செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## நுழைவு தேர்வு அடிப்படையில் மட்டுமே மாணவர் சேர்க்கை

### சுருக்கம்:




- நுழைவு தேர்வு மார்க் அடிப்படையில் மட்டுமே மாணவர் சேர்க்கை நடைபெற வேண்டும் என்று மத்திய பல்கலைக்கழகங்களுக்கு யுஜிசி அறிவுறுத்தியுள்ளது. 'இளநிலை பட்ட படிப்புகளில் மாணவர் சேர்க்கையை பொது பல்கலைக்கழக நுழைவு தேர்வு (சியுஇடி) மதிப்பெண் அடிப்படையில் மட்டுமே நடத்த வேண்டும்' என்று மத்திய பல்கலைக்கழகங்களை பல்கலைக்கழக மானிய குழு (யுஜிசி) கேட்டு கொண்டுள்ளது.
- 'நாடு முழுவதும் உள்ள 45 மத்திய பல்கலைக்கழகங்களில் வழங்கப்படும் பல்வேறு இளநிலை பட்ட படிப்புகளில் மாணவர் சேர்க்கையானது பிளஸ் 2 மதிப்பெண் அடிப்படையில் அல்லாமல் பொது பல்கலைக்கழக நுழைவு தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- மாணவர்களுக்கான குறைந்தபட்ச தகுதி மதிப்பெண்ணை அந்தந்த பல்கலைக்கழகங்களே நிர்ணயித்து கொள்ளலாம்' என்று யுஜிசி கடந்த மாதம் அறிவிப்பு வெளியிட்டது.
- பல்வேறு அமைப்புகளும், அரசியல் கட்சிகளும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. ஏழை மாணவர்கள் மத்திய பல்கலைக்கழகங்களில் சேர்க்கை பெற முடியாத நிலையை இது உருவாக்கும் என அவர்கள் புகார் தெரிவித்தனர்.
- இதுபோன்று எதிர்ப்பு தெரிவித்து வரும் சூழலில், 'நுழைவு தேர்வு மதிப்பெண் அடிப்படையில் மட்டுமே சேர்க்கை நடத்தப்பட வேண்டும்' என்று யுஜிசி மீண்டும் தெளிவுபடுத்தியுள்ளது.

- இதுதொடர்பாக அனைத்து மத்திய பல்கலைக்கழக துணைவேந்தர்களுக்கும் யுஜிசி செயலர் ரஜ்னீஷ் ஜெயின் மத்திய பல்கலைக்கழகங்கள் மற்றும் அதன் கீழ் இயங்கும் கல்லூரிகளில் வழங்கப்படும் இளநிலை பட்ட படிப்புகளில் மாணவர் சேர்க்கையானது சியுஇடி மதிப்பெண் அடிப்படையில் மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இதன் மூலம் தெளிவுபடுத்தப்படுகிறது.
- நுண் கலை, நாட்டியம் உள்ளிட்ட நிகழ் கலை, விளையாட்டு, உடற்கல்வி உள்ளிட்ட செயல்பாடு அடிப்படையிலான சில இளநிலை பட்ட படிப்புகளுக்கான சேர்க்கையில் கூடுதல் தகுதி நடைமுறைகளை பின்பற்றி கொள்ளலாம் என்று ரஜ்னீஷ் ஜெயின் தெரிவித்துள்ளார்
- மத்திய பல்கலைக்கழகங்களில் சேர்க்கை பெற விரும்பும் மாணவர்களுக்கு சியுஇடி நுழைவு தேர்வு ஒற்றை சாளர சேர்க்கை வாய்ப்பை ஏற்ப்படுத்தி தரும்' என்று அந்த நுழைவுத் தேர்வை நடத்தும் தேசிய தேர்வுகள் முகமை (என்டிஏ) சார்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த நுழைவுத் தேர்வு கணினி அடிப்படையில் (சிபிடி) நடத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

## பேரழிவு ஆயுதங்களுக்கு நிதியுதவி செய்வதைத் தடுக்கும் மசோதா

### சுருக்கம்:



- பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு நிதியுதவி வழங்குவதைத் தடை செய்யும் சட்டத் திருத்த மசோதா, மக்களவையில் நிறைவேறியது.
- பேரழிவு ஆயுதங்கள் (சட்ட விரோதச் செயல்கள்) சட்டம், கடந்த 2005 – ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது.

### முக்கிய சிறப்பம்சங்கள்:

- சட்டத்தில், பேரழிவு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு மட்டுமே தடை விதிக்கப்பட்டுள்ளது. அதில், சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, மக்களவையில் அந்த மசோதா அறிமுகம் செய்யப்பட்டது
- மசோதா மீது புதன்கிழமை நடைபெற்ற விவாதத்தின்போது, இந்த மசோதா நிறைவேறுவது காலத்தின் அவசியம் என்று கூறி கட்சி வேறுபாடின்றி அனைத்துக் கட்சி உறுப்பினா்களும் மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்தனர். அதைத் தொடா்ந்து குரல் வாக்கெடுப்புடன் மசோதா நிறைவேற்றப்பட்டது.
- இந்த மசோதாவின் மூலம், பேரழிவு ஆயுதங்களைத் தயாரிப்பதற்கு நிதியுதவி செய்பவர்களின் சொத்துகளை முடக்கவும் பறிமுதல் செய்யவும் மத்திய அரசுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. முன்னதாக, நடைபெற்ற விவாதத்தின்போது வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர்
- சட்ட திருத்த மசோதா நிறைவேறுவதால், இந்தியாவின் தேசப்பாதுகாப்பு மேலும் வலுவடையும்; சா்வதேச அளவில் இந்தியாவின் அந்தஸ்தும் உயரும். அண்மைக் காலமாக, பேரழிவை ஏற்படுத்தும் ஆயுதங்களின் பரவலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை சர்வதேச அமைப்புகள் தீவிரப்படுத்தி, புதிய கட்டுப்பாடுகளை விதித்து வருகின்றன.
- ஐ.நா. பாதுகாப்பு கவுன்சில், பயங்கரவாத நிதி தடுப்பு அமைப்பு (எஃப்ஏடிஎஃப்)ஆகியவை பேரழிவு ஆயுதங்களுக்கு நிதியுதவி வழங்குவதைத் தடை செய்துள்ளன என்றார்

# வேளாண் ஏற்றுமதி ரூ . 3.79 லட்சம் கோடியை எட்டி சாதனை

சுருக்கம்:



- நாட்டின் மொத்த பொருட்கள் ஏற்றுமதி வர்த்தக மதிப்பு, 2021—22ம் நிதியாண்டில், 31.35 லட்சம் கோடி ரூபாயை எட்டியுள்ளது.இந்திய ஏற்றுமதியாளர் கூட்டமைப்பு (பியோ )
- தலைவர் சக்திவேல் அறிக்கை:கடந்த 2021 ---- 22ம் நிதியாண்டில், நாட்டின் பொறியியல் பொருட்கள், பெட்ரோலியம், ரத்தினம், நகைகள், ரசாயனம், பருத்தி நூல், துணி, கைத்தறி பொருட்கள் ஏற்றுமதி சிறப்பாக நடைபெற்றுள்ளது

.முக்கிய சிறப்பம்சங்கள்:

- அமெரிக்கா, நெதர்லாந்து, சிங்கப்பூர், ஹாங்காங், இங்கிலாந்து, பெல்ஜியம், ஜெர்மனி நாடுகளுக்கான இந்திய ஏற்றுமதி அதிகரித்துள்ளது.
- புதிய வர்த்தக ஒப்பந்தங்கள், மத்திய அரசின் சலுகைகள், நாட்டின் ஏற்றுமதி துறைக்கு ஊக்கம் அளித்துள்ளன.
- கடந்த 2021 -- 22ம் நிதியாண்டில், நாட்டின் மொத்த பொருட்கள் ஏற்றுமதி, 30 லட்சம் கோடி ரூபாய் எட்டுவதற்கு பிரதமர் மோடி இலக்கு நிர்ணயித்தார்.
- நிதியாண்டின் 11 மாதங்களிலேயே, இந்த இலக்கை கடந்துசென்றுவிட்டோம்.கடந்த மார்ச் மாதமும் ஏற்றுமதி வர்த்தகம் சிறப்பாக நடந்துள்ளது.
- நிதியாண்டின் மொத்த ஏற்றுமதி, 31 லட்சத்து 35 ஆயிரம் கோடி ரூபாயை எட்டிப்பிடித்துள்ளது. அடுத்தடுத்த நிதியாண்டுகளில், ஏற்றுமதி வர்த்தகம் மேலும் சாதனை படைக்கும் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது.

## முக்கிய தினங்கள்

# உலக சுகாதார தினம் : ஏப்ரல் 7

சுருக்கம்:

- உலக சுகாதார தினம் என்பது ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 7 ஆம் தேதி உலக சுகாதார விழிப்புணர்வு தினமாகும்.
- 2022 உலக சுகாதார தினத்தின் கருப்பொருள் 'நமது கிரகம், நமது ஆரோக்கியம்' என்பதாகும்.
- இந்த ஆண்டின் கருப்பொருள் நமது கிரகம் மற்றும் அதில் வாழும் மனிதர்களின் நல்வாழ்வை நோக்கி உலகளாவிய கவனத்தை செலுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பு (WHO) 1948 இல் முதல் உலக சுகாதார சபையைக் கூட்டியது, இது "உலக சுகாதார தினத்தை நிறுவுவதற்கு அழைப்பு விடுத்தது.
- முதல் உலக சுகாதார தினம் ஏப்ரல் 7, 1950 அன்று நடத்தப்பட்டது, அதன்பிறகு ஒவ்வொரு ஆண்டும் அந்த தேதியில் அது அனுசரிக்கப்படுகிறது.
- உலக சுகாதார அமைப்பின் முன்னுரிமைப் பகுதியை முன்னிலைப்படுத்த ஒரு குறிப்பிட்ட சுகாதாரத் தலைப்பைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதே இந்த நாளின் முக்கிய குறிக்கோள்.